வலிகாமம் மேற்கு பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வலிகாமம் மேற்கு பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் வருமானங்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | - | - | 03 | 42இ870 |
| அதிகரித்துக் கூறல்கள் | - | - | 03 | 690 |
| வகைப்படுத்தல் வழு | 01 | 30இ125 | - | - |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

பிரதான பேரேட்டில் கையிருப்பிலுள்ள களஞ்சியப் பொருட்களின் பெறுமதி ரூபா 313,077 ஆகக் காணப்படுகின்ற போதும் உப பேரேட்டு பதிவேட்டில் கையிருப்பிலுள்ள களஞ்சிய பொருட்களின் பெறுமதி ரூபா 202,355 ஆக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்குத் தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,137,263 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 16இ476இ671 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 9,613,610 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 9இ671இ921 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 8இ649இ285 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

---

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

---

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 1,699 | 1,847 | 5,331 |
| குத்தகை வாடகைகள் | 8,618 | 9,281 | 12 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 784 | 962 | 60 |
| வேறு வருமானங்கள் | 34,822 | 43,505 | 18,038 |

### 2.3.2 வீத வரியும் ஏனைய வரிகளும்

2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள வீதவரி மீதி ரூபா 5,331,436 ஆக இருந்ததுடன் 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வியாபார உரிமங்களின் அறவீடு

வியாபார உரிமங்களின் அறவீட்டுக்கு பட்டியல் வழங்கும் நடைமுறை பின்பற்றப்படாமையால் வியாபார உரிமங்கள் அறவிடும்போது மட்டுமே வருமானமாக கணக்குகளில் காட்டப்படுவதினால் வருமதி வியாபார உரிமக் கட்டணங்கள் கணக்கிடப்படாமையால் வருமானம் குறைத்து கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

### 2.3.4 வருமான பாதிப்பு

i சபையின் பரப்பினுள் இடம் பெறும் களியாட்ட நிகழ்வுகளுக்கு வருமானத்தில் 5மூ களியாட்டவரி அறவிட வேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தலுக்கு மாறாக சபையின் பரப்பில் இடம் பெற்ற இரண்டு களியாட்ட நிகழ்வுகளுக்காக வைப்பிலிடப்பட்ட தொகையிலிருந்து களியாட்டவரி ரூபா 30,282 அறவீடு

செய்யப்படாது வைப்புத் தொகையினை மீளளிப்பு செய்தமையினால் சபைக்கு வருான இழப்பு ஏற்பட்டுள்ளது.

ii 1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அனைத்தும் சபையிடமிருந்து இலங்கை மின்சார சபைக்கு கையளிக்கப்பட்டது. ஆயினும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீளளிப்பு பெறப்படாது ரூபா 70இ303 சபைநிதியில் வீதி விளக்கு வேலைகளுக்காக செலுத்தியிருப்பது சபைக்கு வருமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

2.3.5 நீதிமன்றத் தண்டப்பணங்கள்

---------------------------------------------

நீதிவான் நீதிமன்றங்களிலிருந்து 2012ம் ஆண்டிற்கு மே – டிசம்பர் வரையான காலங்களுக்குரிய நீதிமன்ற தண்டப்பணங்களும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3.6 முத்திரைத்தீர்வை கட்டணம்

---------------------------------------------

2006 – 2012 ம் ஆண்டுவரை கிடைக்க வேண்டிய முத்திரைத் தீர்வைகள் ரூபா 20இ609இ652 வருமானமாக சிட்டையிடப்பட்டு வருமானமாகவும் வருமதியாகவும் காட்டப்பட்டதேயன்றி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

---------------------------------------

பயன்படுத்தப்படாத பௌதீகச் சொத்துக்கள்

----------------------------------------------------------------------

1999 – 2008 ம் ஆண்டு காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் பயன்பாடின்றி பழுதடைந்த நிலையிலுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
விபரம் வருமாறு

| விபரம் வருமாறு | கொள்வனவுத் திகதி | பெறுமதி ரூபா |
|---|---|---|
| நிழல்படபிரதி இயந்திரம் ஊழுைெய 1212 | 18.06.1996 | 177இ975 |
| சொனிக் கணணி | 31.12.2008 | 61இ500 |
| லேசர் பிறின்ரர் 1005 | 31.12.2008 | 14இ700 |
| 5 நீர் தாங்கி | - | - |
| 2 கைவண்டில் | - | - |

2.5 சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை ------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) **1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதிநிர்வாக ஒழுங்கு விதி** | |
| (i) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 29 | மொத்த சேகரிப்புகள் நாள்தோறும் வங்கியில் வைப்புச் செய்ய வேண்டும் என்பதற்கு மாறாக 01.01.2012 – 06.12.2012 வரையான காலப்பகுதிகளுக்கு ரூபா 16,970 அறவீட்டு வருமானங்கள் வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் ஐஐஐ பிரிவு 66 | செயலாளரினால் 1987 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 150(4) ம் பிரிவின் கீழ் வாடகை கடை மற்றும் வியாபார உரிம நிலுவை ரூபா 73,293 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 1996ம் ஆண்டின் 34ம் இலக்க பொருட்கள் சேவைகள் வரி அதிகாரச்சட்டம் | அறவிடப்பட்ட பொருட்கள் சேவைகள் வரி ரூபா 16,777 உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்படாது சபை வருமானமாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. |
| (இ) 2002 இன் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | காலாண்டுகளுக்கு அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரியை காலாண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20ம் திகதி அன்று அல்லது அதற்கு முன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தவேண்டும் என்பதற்கு மாறாக 2002–2003ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரி ரூபா11,429 சபையின் நானாவித வைப்புக் கணக்குகளில் அறிக்கையிடும் திகதி வரையும் உள்டக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி 571 | 1983 – 2010ம் ஆண்டு வரையான காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 841,195 நிதி ஒழுங்கு விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பிரதேசசபையின் 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 132ம் பிரிவு | உள்;ராட்சி வார நிகழ்விற்கு சபைநிதி மூலம் ரூபா 74,520 செலுத்தப்பட்டிருப்பது நோக்கத்திற்கு முரணான செலவினமாக அவதானிக்கப்பட்டுள்ளது. |

2.6 தவறான கொள்வனவு நடைமுறை.

-----------------------------------------------------

(அ) சபை எல்லையினுள் ஆதனங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்ய வருகை தந்த விலைமதிப்பீட்டு திணைக்கள அலுவலர்களது தனிப்பட்ட பாவனைக்காக மெத்தை, தலையணை, பாய் போன்றவற்றின் கொள்வனவிற்காக சபை நிதியில் ரூபா 13,080

செலுத்தப்பட்டிருப்பது தவறான கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆயுள்வேத மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு யாழ் மாவடத்தில் சித்த வைத்திய மருந்துகள் உற்பத்தி விற்பனைக் கூட்டுத் தாபனம் காணப்படுகின்றபோதும் ஆயுள் வேத திணைக்களத்தில் பதிவு செய்யப்படாத தனியார் மருந்தகத்தில் ரூபா 69இ525 இற்கு மருந்து கொள்வனவு செய்யப்பட்டமை தவறான கொள்வனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.7 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

----------------------------------------------

2012 ம் ஆண்டு வரவு செலவு திட்டத்திற்கான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட 02 மூலதன வேலைகள் ரூபா 1இ500இ000 பெறுமதியானவை முற்றாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை ஆயினும் குறித்த நிதியாண்டில் வட்டி வருமானம் பெறும் நோக்கில் சங்கானை மக்கள் வங்கியில் நிலையான வைப்பில் ரூபா 3,000,000 வைப்புச் செய்யப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

2.8 செயற்பாடுகளின் செயற்திறமையின்மை

---------------------------------------------------------------

1998 – 2012ம் ஆண்டு காலப்பகுதியில் சபைக்கு கிடைக்கப் பெற்ற நன்கொடைகளில் ரூபா 1,198,863 சனசமூக நிலைய மலசலகூட புனரமைப்பிற்கு பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நன்கொடைகள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாதிருப்பது சபையின் முகாமைத்துவ பலவீனத்தை காட்டுகின்றது.

**3.** முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள், கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i வருமான சேகரிப்பு

ii கணக்கீடு

iii நன்கொடை

iv நானாவித வைப்புக்கள்

v வரவு செலவுத்திட்ட செயற்திட்ட கட்டுப்பாடு.